இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்க நெறிக்கோவை

பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள்/ அனுமதிப்பத்திரம் உள்ளோர்க்கு

# பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்க நெறிக்கோவை

## பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள்/ அனுமதிப்பத்திரம் உள்ளோர்க்கு

இந்த தொழிநுட்ப வழிகாட்டியானது கொழும்பு சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் இலங்கை மற்றும் மாலைத்தீவுகளுக்கான அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டது.

நவம்பர் 2013

# முகவுரை

இலங்கையில் தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் தொழிற்றுறையானது நாட்டின் புலம்பெயர் தொழில்துறையில் பிரதான வகிபங்கினைக் கொண்டமைந்துள்ளது. ஆபத்தற்ற, நிலையானதும் கௌரவத்தைப் பாதுகாக்கின்ற தொழில் நிலவரங்களின்மீது இலங்கையர்க்கு தொழில் வழங்கும் தொழில்துறைகள் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், இலங்கையிலும், தொழிலுக்காகச் செல்லும் நாடுகளிலும் புலம்பெயர் தொழிலாளர்கள் துஷ்பிரயோகங்களுக்கும் சுரண்டல்களுக்கும் ஆளாகும் சந்தர்ப்பங்களைக் குறைக்கும் வகையில் தொழிற்றுறையில் சட்டப்படியான கட்டுப்பாடு ஒன்று தேவையாகும். புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாக்கவுள்ள அதிகாரம்பெற்ற அரச நிறுவனமான இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அதில் பதிவாகியுள்ள 700 இற்கும் மேற்பட்ட அனுமதிப்பத்திரம்பெற்ற ஆட்சேர்ப்பு முகவர்களின் சட்டமுறையான கட்டுப்பாட்டுக்குட்பட்டதாக கொண்டுவருவதற்கான முயற்சிகள் ஒருசில மேற்கொள்ளப்படுகின்றன.

சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினூடாகவும் இலங்கை அரசினால் தேசிய தொழிலாளர் புலம்பெயர்வுக் கொள்கையை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. "புலம்பெயர் தொழிலாளர் செயற்பாடுகளின்மீது ஆட்சேர்ப்புப் பிரிவின் நல்லாட்சி, அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் திட்டமுறைகள், விழுமியம்சார் ஒழுக்கநெறிக் கோவை, வழிப்படுத்தல்கள், சட்டவிரோத செயற்பாடுகளை எதிர்கொள்வதற்காகவுள்ள சட்ட வழிமுறைகள் அரசினால் தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் தொழிற்துறையை நிர்வகிக்கப்படும்" என்று கொள்கைத்திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனை மேற்கொள்ளும்வகையில் "புலம்பெயர் தொழிலாளர்களின் நல்லாட்சி, பாதுகாப்பு மற்றும் பலப்படுத்தும் வகையில் கௌரவமான தொழில் மேம்படுத்தல்கள், இலங்கை தேசிய புலம்பெயர் தொழிலாளர் கொள்கையை வினைத்திறனுடன் செயற்படுத்துவதனை உறுதிசெய்தல்" என்னும் கருத்திட்டத்தின் மூலம் ஆட்சேர்த்தல் தொழில்துறையைக் கட்டுப்படுத்துவதற்கான சான்றுகள், வழிமுறைகளைக் கட்டமைப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு ஒத்துழைப்பதற்காக சர்வதேச தொழிலாளர் தாபனத்தினால் சிலவகையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2011 நவம்பர் மாதத்தில் இலங்கையிலும், வெளிநாடுகளிலுள்ள ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய ஆய்வுக்கான கருத்திட்டங்களின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நடைமுறையிலுள்ள விஷேடமான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் இந்த ஆய்வின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டதுடன், அவற்றை முன்னேற்றும்வகையில் சான்றுகளும் முன்வைக்கப்பட்டன. ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் ஆட்சேர்ப்புத் தொழிற்துறையின் நற்பழக்கங்களை ஆய்வு செய்வதற்காகவேண்டி வெளிக்காட்டப்படுகின்ற தகவல்களை ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு மற்றும் தகவல் மீளாய்வுகளால் கண்டெடுக்கப்பட்ட காரணிகளை பரிமாற்றம் செய்வதற்காக சர்வதேச தொழிலாளர் தாபனத்தால் 2012 ஏப்ரல் மாதத்தில் தேசிய பங்குதாரர்களின் செயலமர்வொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. அதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சின் செயலாளர் தலைமை வகித்தார். தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, தனித்தனியான ஆட்சேர்ப்பு முகவர்கள், பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் சங்கம், தொழிற் சங்கங்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளும் இந்த செயலமர்வில்

கலந்துகொண்டனர். பங்குபற்றியோரினால் முன்வைக்கப்பட்ட ஆய்வுச் சுருக்கத்தில் இலங்கையில் தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் தொழிற்துறைக்காக பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையொன்றைத் தயாரிப்பது தொடர்பில் உடன்பாடு காணப்பட்டது. புலம்பெயர் தொழிலாளர்கள் பற்றிய சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் பல்துறை பங்குதாரர்களின் சட்டகத்தில் காட்டப்படும் ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடுகின்றவகையில் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உரிமைகள், இந்த நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில்களை மேற்கொள்வதனை உறுதிசெய்யும்வகையில் இது மேற்கொள்ளப்பட்டது. பங்குதாரர்களின் செயலமர்விலுள்ள ஒரு பிரதான பலன்தான், தலைமைவகிக்கும் ஆட்சேர்ப்பு முகவர்களுக்கான பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையொன்றினைக் கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டல் உப செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டமையாகும்.

இந்தக் குழுவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு.டீ. சுவர்னபால, தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளரின் இணைப்புச் செயலாளர் திருமதி. பீ.ரத்னாயக்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கொன்சியுலர் பிரிவின் பதிற்கடமைபுரியும் பணிப்பாளர்நாயகம் திரு.டப்ளியூ.என்.எஸ். பண்டார, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மேலதிக பொதுமுகாமையாளர் திரு.கே.டீ.டீ. பெர்னாந்து, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் (சட்டம்) திருமதி.சேகா பிரேமசிரி, பதிவுசெய்த வேலைவாய்ப்பு முகவர் சங்கத்தின் செயலாளர் திரு. டப்ளியூ.எம். அபோன்சு, பதிவுசெய்த வேலைவாய்ப்பு முகவர் சங்கத்தின் செயலாளர் திரு.பைசல் மகீன், இலங்கை ஊழியர் சங்கத்தின் உப தலைவர் திரு.கே. மாரிமுத்து மற்றும் சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் ஆலோசகர் திரு.எல்.கே. ருகுணகே போன்றோர் உள்ளடங்கியிருந்தனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நிறுவனச் சட்டக்கோவைக்கேற்ப இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் திரு.எச். படகொட, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொதுமுகாமையாளர் (சட்டம்) திருமதி.எம்.எம்.சந்தியா சுவிட்டி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் உதவி முகாமையாளர் (சட்டம்) திரு. ஆர்.ஏ.ஜீ.எஸ்.ஜயசிங்க போன்றோரின் தலையீட்டுடன் தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் முகவர்களுக்காக பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவை கட்டியெழுப்பப்பட்டது. இந்த ஆவணத்தைத் தயாரிக்கும் ஒட்டுமொத்த செயற்பாட்டிலும் திருமதி. பத்மினி ரத்னாயக்க, திரு.எல்.கே. ருகுணகே ஆகியோர் தமது தொழில்சார் பங்களிப்பினை வழங்கியமையையிட்டு அவர்களுக்கு நன்றிகள் உரித்தாகட்டும்.

2013 ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணிப்பாளர் சபையால் பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவைக்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், தொழில் மட்டம், பொறுப்புகள், வகைகூறல் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் நியாயமாக நடந்துகொள்வதனை ஊக்குவித்து, தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் முகவர்களின் அனுபவங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கில் இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவை கட்டியமைக்கப்பட்டது. புலம்பெயர்கின்ற இலங்கை ஆண், பெண்களுக்கு பாதுகாப்பு மற்றும் நிலையான தொழில் கிடைப்பதை உறுதிசெய்வதற்காக இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையில் குறிப்பிடப்படும் அடிப்படைத் தத்துவங்களைப் பின்பற்றுதல் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவோரினது கடமையாகும்.

# உள்ளடக்கம்


வரைவிலக்கணங்கள் 8

1. அறிமுகம் 9

    1.1 நோக்கம் 9

    1.2 உத்தியோகபூர்வ பெயர் 10

    1.3 அதிகாரத்துவம் 10

2. சட்டப்படியொழுகுதல் 10

3. வியாபாரத் தரங்கள் நற்பழக்கங்கள் 11

4. வேலைவாய்ப்பு விளம்பரங்கள் 12

5. ஆட்சேர்த்தல் 13

6. தொழிலாளர்களின் பாதுகாப்பும் நலனோம்புகளும் 15

7. பயிற்சி 17

8. முறைப்பாடுகளையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல்18

9. சேவை பெறுவோர் மற்றும் தொழில்நாடுவோர்க்குள்ள பொறுப்புகளும், வாடிக்கையாளர் நலன்களும் 19

10. கூட்டுச் சேர்தல் 20

11. மீண்டும் திரும்பிவந்த தொழிலாளர்களை சமூகத்துடன் இணைத்தல் 21

12. பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையை விளங்கிக்கொள்ளல் 21

13. பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையை நடைமுறைப்படுத்துதல் 22

14. அதிகாரத்துவம் 23

15. முறைப்பாடுகளை முன்வைக்கும் காலப்பகுதி 23

# பொருள் விளக்கம்

(i) மனித ஆள் வியாபாரம் என்பது, பலவந்தமாக அல்லது கட்டாயப்படுத்தி ஊழியத்தை அல்லது சேவையைப் பெறுதல், அடிமைப்படுத்தல், விருப்பத்துக்காளாக்குதல், அங்கங்களை அகற்றுதல் அல்லது (குற்றவியல் தண்டனைக்கோவையின் S. 360 C அத்தியாயத்தில் விளக்குவதுபோல) எந்தவொரு சட்டத்தாலும், அல்லது சட்டவிரோத செயற்பாடுகள் என்று கருதுகின்ற பாலியல் சுரண்டல் அல்லது வேறு வகையிலான செயற்பாடொன்றுக்காக மிரட்டுதல், கட்டாயப்படுத்துதல், ஊழல், ஏமாற்றம் அல்லது தூண்டுதல் அல்லது ஏனையோரின் அப்பாவித்தன்மையைப் பயன்படுத்தி ஆட்சேர்த்தல், கொண்டுசெல்லல், ஒப்படைத்தல், தடுத்துவைத்தல், அல்லது வேறு செயற்பாடுகளுக்காக, பணத்துக்காக அல்லது வேறு காரியத்துக்காக எந்தவொரு நபரும் விலைக்கு வாங்குதல், விற்றல், அல்லது கைமாற்றல், அல்லது விலைக்கு வாங்குதல், விற்றல், அல்லது கைமாற்றவதற்காக மேம்படுத்தல், வசதியளித்தல் அல்லது வேறு நபர்களைத் தூண்டுதல்.

(ii) மனித ஆட்கடத்தல் என்பது, நேரடியாக அல்லது மறைமுகமாக வேறு பொருள்நாடி ஒரு நாட்டின் நபரொருவரை வேறொரு நாட்டினரல்லாத அல்லது நிரந்தர வசிப்பிடமற்ற நபரொருவர்க்கு சட்டவிரோதமாக அந்த நாட்டினுள் நுழைவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல். சட்டவரம்புகள், சட்ட வழிமுறைகள் பற்றிய தெளிவின்றி நாட்டின் எல்லையினூடாக சுதந்திரமாக நாடொன்றுக்குள் நுழைவதற்கு இயலாதவிடத்து புலம்பெயர்வோரினால், குறித்த நாட்டினுள் நுழைவதற்காக சட்டவிரோத கடத்தல்காரர்களுக்கு கொடுப்பனவு செய்வதன்மூலம் தமது தேவைப்பாடுகளை மேற்கொள்வதாகும்.

(iii) பலவந்தமாக வேலைவாங்குதல் என்பது, (குற்றவியல் தண்டனைக்கோவையில் விளக்குவதுபோல) ஆண்/ பெண் ஒருவரினால் சுயாதீனமாக மேற்கொள்ளாத ஆயினும் தண்டிக்கப்படலாம் என்று மிரட்டுவதன்மூலம் பெற்றுக்கொள்ளும் எல்லாவிதமான வேலைகளும், சேவைகளும் என்று பொருள்படும்.

(iv) சிறுவர் ஊழியம் என்பது, குழந்தைகள் தமது சிறுபராயத்தில், அவர்களுடைய ஆற்றல்கள், அபிமானம் இழக்கின்ற வகையில், அவர்களின் உடல், உளவியல் வளர்ச்சியைப் பாதிக்கின்ற வேலைகளாகும். அதிலிருந்து புலப்படுவதாவது, பிள்ளைகளுக்கு உடல், உளவியல், சமூக மற்றும் பண்பாட்டு விழுமியம் ஆபத்துக்காளாகும், பாதிப்படையும், குறித்த காலத்திற்கு முன்னர் அவர்கள் பாடசாலையை விட்டு விலகவேண்டியேற்படல் மூலம் கல்விக்குள்ள வாய்ப்புகளை இழக்கவேண்டிய வேலைகளாகும். அவ்வாறன்றி பாடசாலை செல்வதுடன் நீண்டநேரம் அதிகமான கடினமான வேலைகளில் ஈடுபடுவதுடன் தொடர்புடைய வேலைகளாகும். (சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் பொருள்விளக்கம்)

(v) தொழில் நாடுபவர் என்பது, வெளிநாட்டுத்தொழிலைத் தேடும் இலங்கையர் ஒருவராகும்.

# 1. அறிமுகம்

பல்வேறு நாடுகளினதும் வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்பும்போது பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் பங்களிப்பு தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது. நாட்டின் வேலையின்மை, அறைகுறை வேலையின்மையைக் குறைப்பதற்காக அவர்களின் பெறுமதியான சேவைகள் பேருதவியாக அமைவதுடன், தற்காலத்தில் வெளிநாட்டு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் வழியாகவும் தேசிய பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை பிரதானமாக அமையும்.

பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் மூலம் மேற்கொள்ளும் முக்கியமான சேவைகளையிட்டு நன்றி கூறுவதுடன், 2008 இல் வெளியாகவிருந்த தேசிய புலம்பெயர் தொழிற்கொள்கை மூலம் பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களிடையே சிறந்த பண்பாட்டு வழிமுறைகளை மேம்படுத்துவதற்குள்ள முக்கியத்துவத்தைக் கண்டறியப்பட்டுள்ளது. அதன் பிரதான நோக்கமாவது, அவர்களது வியாபார இயலளவினைக் கட்டியெழுப்புதல், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் நற்பழக்கங்களை மேம்படுத்தி, புலம்பெயர் தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினர்க்கும், நாட்டின் பொருளாதாரத்திற்கும், அனைத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கும் அந்தக் கொள்கைகளின் நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதாகும்.

தொழில்களை ஒழுங்குமுறைப்படுத்தும் எதிர்பார்ப்பில், இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலன்புரி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட உப செயற்குழுவினால் தயாரிக்கப்பட்டது. அந்த உப செயற்குழுவானது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலன்புரி அமைச்சினதும், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினதும், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அலுவலர்களையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சங்கத்தில் பதவிவகிப்போரையும் உள்ளடக்கியுள்ளது. இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையைத் தயாரிக்கும்போது பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் சங்கத்தினது பங்குபற்றுதலில் இருந்து புலப்படுவதாவது மிகவும் ஒழுங்குமுறைப்படியான, நேர்மையான முறையிலமைந்த தங்களுடைய ஆட்சேர்ப்பு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களை நிறுவுவதற்காக ஆட்சேர்ப்பு முகவர்கள் காட்டும் அக்கறையாகும்.

## 1.1 நோக்கம்

இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவை மூலம் கீழ்வரும் நோக்கங்களை அடைந்துகௌள்வதற்கான சட்டகத்தை அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

I. தொழில்நாடுவோர், தொழிலதிபர்கள் மற்றும் ஏனையோருடன் பதிவுசெய்த முகவர்கள் கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களின்போது

பண்பாட்டு விழுமியங்களையும் தொழில் திறன்களையும் மேம்படுத்தல்.

II. தொழில்நாடுவோர்க்கும் தொழிலதிபர்களுக்கும் உச்ச தரம்வாய்ந்த தொழில்களை வழங்குவதற்கும் ஆட்சேர்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சிறந்தமுறையில் கட்டுப்படுத்தப்பட்ட நற்பண்புள்ள சட்டகத்தினுள் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களைக் கொண்டுவரல்.

III. 1985 இல 21 இன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக திருத்தச்சட்டம், சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் சிறந்த தொழில் ஒழுங்குப்பத்திரம், சர்வதேச தொழில் தரங்களுடன் ஒப்பிடும்வகையிலான பண்பாட்டுத்தரங்கள், வழிகாட்டுதல்களை நிறுவுவதற்காக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களின் நடவடிக்கைகளை நிர்வகித்தல்.

IV. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொழிற்துறையில் தரங்களை மேம்படுத்துவதற்காக அதிகாரசபை மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் நற்புறவுகளைக் கட்டியெழுப்புதல்.

### 1.2 உத்தியோகபூர்வ பெயர்

இந்த சட்டக்கோவையானது “பதிவுசெய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கான பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவை” என்று அழைக்கப்படும்.

### 1.3 அதிகாரத்துவம்

1985 இல 21 இன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக திருத்தப்பட்ட சட்டம் மற்றும் 2008 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய புலம்பெயர் தொழிலாளர்களைப்பற்றிய கொள்கைகளின் விதிகளுக்கேற்ப இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவை தயாரிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகிகளால் ஏற்று அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்து இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவை அமுல்படுத்தப்படும்.

## 2. சட்டப்படியொழுகுதல்

I. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு எல்லா பதிவுசெய்த வெளிநாட்டு ஆட்சேர்ப்பு முகவர்களினாலும் இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள், வழிகாட்டல்களுக்கு கீழ்ப்படிந்து நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

II. அதனைவிட வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக விடயப்பரப்புடன் வலுப்பெறும் உள்நாட்டுச் சட்டங்களினால் காட்டப்படும் கட்டளைகளுக்கு பதிவுசெய்த எல்லா ஆட்சேர்ப்பு முகவர்களும் கட்டுப்படல் வேண்டும் என்பதுடன் மதிப்பளித்தலும் வேண்டும்.

III. இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களை அனுப்புகின்ற எந்தவொரு வெளிநாட்டிலும் குறிப்பிட்ட சட்டங்களில் உள்ள விதிகளுக்கு எல்லா பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

# 3. வியாபார தரங்கள், நற்செயற்பாடுகள்

I. புலம்பெயர் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் நேர்மை, தொழில்வான்மை மற்றும் நற்பழக்கங்கள் பற்றிய அடிப்படைகளை உயர் மட்டத்தில் பின்பற்றுதல் வேண்டும்.

II. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஆட்சேர்க்கும்போதுள்ள வாய்ப்புகளினை ஏற்றுக்கொள்ளும்போது தொழில்நாடுவோர், விசேடமாக பெண்களுக்குப் பாரபட்சம் காட்டல் அல்லது அவர்கள்மீது எதிர்மறையாகத் தாக்கஞ்செலுத்தும், அல்லது அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற மற்றும் சர்வதேச அங்கீகாரங்களுக்கு முரணானவகையில் செயற்படுவதனைத் தடுத்தல்.

III. பணம் அல்லது அந்தஸ்துக்காக பாதகமிழைத்தல், சட்டவிரோத அல்லது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கின்ற (ருஒநயடவால) போட்டி நிலைமைகளிலிருந்து தவிர்ந்துகொள்ளுதல்.

IV. தெளிவானதும், நேர்மையுடையதுமான வியாபாரியாதல் என்னும் கொள்கை இருத்தல்.

V. தொழில்நாடுவோர/ புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் கூட்டுச்சேர்வோருடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது நேர்மையாகவும், பொறுப்புக்களைப் பாதுகாக்கின்ற விதத்திலும் நடந்துகொள்ளல்.

VII. வியாபார இடத்தில், சுற்றுச் சூழலில் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் வழங்கும் சேவைகளுக்காக தரங்களை அமைப்பதுடன், முகவர் அலுவலகத்திலுள்ள பணியாளர்களின், முகாமையாளர்களின் நடத்தை தொடர்பில் தொழிற் தரங்களைக் கட்டியமைத்தல். எப்போதும் உயர்ந்தபட்ச தரம்வாய்ந்த சேவைகளை வழங்குதல் வேண்டும்.

VIII. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் வசதியளிப்போர்க்கு/ உப முகவர்களுக்கு தங்களுடைய அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாக வழங்குதல் அல்லது அலுவலக வசதிகளை வாடகைக்குவிடல் அல்லது அவ்வாறு மேற்கொள்ளாதிருத்தல்.

IX. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்படையாகவும், நம்பிக்கையுடனும், மரியாதையுடனும் தொழில்நாடுவோர், வாடகைசேவை வழங்குநர்கள் மற்றும் ஏனையோருடன் நியாயமாக நடந்துகொள்ளல்.

X. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அல்லது வியாபாரத்தின் நற்பெயரை உயர்த்துவதற்காக அல்லது ஏனைய பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களை எந்தவகையிலாயினும் அவமானப்படுத்தல், விமர்சித்தல், தாழ்த்துதல், அநியாயமாக தம்பக்கம் திசைதிருப்புவதிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.

XI. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் புலம்பெயர் தொழிலாளர்களின் சம்பளம் அல்லது வேறு கட்டணங்கள், செலுத்துவதிலிருந்து குறைக்காது நிர்வாகிகளால் விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அறவிடல் விதிகளுக்குக் கட்டுப்படல்.

XII. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் தங்களுடைய நிறுவன ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் தகைமைகளை தொடர்ச்சியாக வளர்ப்பதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

XIII. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்த்தல் பற்றிய விதிமுறைகள் மற்றும் சரியான அறிக்கைகளை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் மேற்கொண்டுவரல்.

XIV. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம் கேட்டறிந்து, அனுமதிபெறாத தொழிற்சந்தைக் கொள்கைகள் தொடர்பான இருதரப்பு உடன்பாடுகளுக்கு வராதிருத்தல்.

## 4. வேலைவாய்ப்பு விளம்பரங்கள்

I. வேலைவாய்ப்பு தொடர்பான விளம்பரங்களின் உள்ளடக்கம் பூரணமாக சரியானதும், நம்பிக்கையுள்ளதும் தெளிவானதுமாகவிருத்தல் வேண்டும். எல்லா விளக்கங்களும், உரிமைகளதும் உண்மையை உறுதிசெய்வதற்குள்ள இயலுமையிருத்தல் வேண்டும்.

II. முன்வைக்கின்ற தொழில் வகைகளுக்குத் தேவையான தொழிற் தகைமைகள், கடமைக்குரிய கட்டுப்பாடுகள், சம்பளங்கள் பற்றி வேலைவாய்ப்பு விளம்பரங்களில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

III. பணியாற்றவேண்டியேற்படும் நாட்டில் உரிமைகளின் உண்மைத்தன்மை, சலுகைகள், சம்பளம், வெகுமதிகள், தங்குமிட வசதிகள் அல்லது வாழ்வதற்குரிய சூழல் போன்ற உண்மையான நிலைவரங்களை விஞ்சிய தகவல்கள் உட்பட ஒப்பந்தம் பற்றி தொழிலாளர்களின் பொறுப்புகள், கட்டுப்பாடுகள், பணியாற்றும் நாடுகளில் பணியாற்றும்போது, வாழும்போது எதிர்கொள்ளவேண்டிய கஷ்டங்கள்/சவால்கள் பற்றிய உண்மையான நிலைமைகளை விட குறைவான தகவல்களினை விளம்பரங்களில் உட்படுத்தாதிருத்தல்.

IV. விளம்பரங்கள் உள்ளடங்கிய தகவல்களை பணியாற்றுவதற்கு எதிர்பார்க்கும் நாட்டில் வேலை மற்றும் வாழ்க்கை நிலைவரங்கள் பற்றி தொழில்நாடுவோரினை இலகுவாக தவறான வழியில் செலுத்தும் அல்லது ஏமாற்றக்கூடிய விடயங்களாய் அமையாதிருத்தல்.

V. விளம்பரங்களில் குறிப்பிடப்படும் எல்லாவிதமான விஷேடமான வேலைவாய்ப்புகளையும் வெளியிடும்/ காட்சிப்படுத்தும் சந்தர்ப்பங்களின்போது வெளிநாட்டு சேவை வழங்குநர்/ அனுசரணையாளர் ஒருவரினால் குறித்த பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவரிடம் ஒதுக்கி வைத்தல் வேண்டும், அதற்காகத் தெரிவுசெய்யும் நபர்களுக்கு வழங்குவதற்கு இயலுமாதல் வேண்டும்.

VI. இலங்கையில் அல்லது பயணிக்கின்ற நாட்டிலுள்ள மக்களின் சமயம் அல்லது சமூகப் பெறுமதிகளுக்கெதிரான எந்தத் தகவல்களையும் அல்லது விடயங்களையும் விளம்பரங்களில் உட்படுத்தாதிருத்தல்.

VII. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் விளம்பரங்கள் தொடர்பாக வெளியிடப்படும் வழிகாட்டல்களை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் பின்பற்றப்படுதல் வேண்டும்.

## 5. ஆட்சேர்த்தல்

I. வெளிநாட்டுத் தொழில் பற்றிய கொடுக்கல், வாங்கல்களின்போது ஊழல், தவறான விளக்கங்கள், பண்பாடற்ற நடவடிக்கைகளினால் வியாபாரம் மற்றும் தன்னுடைய வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் முயற்சி மேற்கொள்ளல்.

II. வெளிநாட்டுத் தொழில்களில் சிறுவர்களை ஈடுபடுத்தல் அல்லது வழங்காமையையிட்டு பொறுப்புவகித்தல்/ அல்லது மனித வியாபாரம், ஆட்கடத்தல் வியாபாரம் மற்றும் அதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபடாதிருக்க பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளல்.

III. வெளிநாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதற்கும், மனித ஆட்கடத்தல் வியாபாரத்திலிருந்து தமது வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்கும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் முயற்சிமேற்கொள்வதுடன், அந்த சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவோரை விசாரிக்கவும், வழக்குத் தொடரவும் தங்களுடைய பூரணமான ஒத்துழைப்பினை வழங்குதல் வேணடும். அதேபோல, மனித ஆட்கடத்தல் வியாபாரம் இலங்கை குற்றவியல் தண்டனைக்கோவையில் உள்ளடக்கப்பட்ட தண்டனைக்குரிய குற்றம் என்பதை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் தமது பணியாளர்களைத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

IV. ஆண்/ பெண் பாலியல் ரீதியாக பாரபட்சம் காட்டுவதனைத் தடுத்தல் வேண்டும். தொழில்நாடும் பெண்களின் உரிமைகளையும், தேவைப்பாடுகளையும் தொடர்பாக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் முறையான கவனத்தை ஈடுபடுத்திக்கொள்வதனைப்போல எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தொழில் நாடுவோரின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.

V. பல நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள வயது மட்டங்களும், பலவிதமான தொழில் வகைகளுக்காக இலங்கையினால் விதிக்கப்பட்டுள்ள வயது மட்டங்களையும் நினைவில் வைத்துக்கொண்டு வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான வயதினை விடக் குறைவான தொழில்களைத் தேடுகின்றவர்களைப்பற்றி பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் அவதானமாக இருத்தல் வேண்டும். சந்தேகமானபோது, அடையாளங்காண முடியாத ஆவனங்கள் இல்லாதவிடத்து பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தொழில் நாடுபவரின் வயதினை உறுதிசெய்யும் வைத்தியச் சான்றிதழைக் கோருதல் வேண்டும்.

VI. வெளிநாட்டுத் தொழில்களுக்காக ஆட்சேர்க்கும் தொழிலாளர்களுக்கு தொழில் உடன்படிக்கையொன்றினை வழங்குதல். அத்துடன் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் பொறுப்பாதல் வேண்டும்.

VII. தெரிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தொழில் உடன்படிக்கைகளுக்கு வேறு ஒப்பந்தங்களை மாதிரியாகக்கொள்ளாமல் தவிர்ந்துகொள்ளல். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அதுபோன்றதொரு மாதிரி தொடர்பில் அறியக்கிடைக்குமாயின் அதனைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்வேண்டும்.

VIII. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் ஆபத்தான அல்லது இடர்கொண்ட தொழில்புரியும் சூழலில் கடமையாற்றுவதற்கு நேரிடும், தேவையற்ற/ ஏற்றுக்கொள்ள முடியாத ஆபத்தான தொழில்களுக்காக ஆட்சேர்ப்பதிலிருந்து தவிர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

IX. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் ஒருவரினால் வழங்கப்படும் தொழிலாளர்கள் தொடர்பில் அவர்களுடைய நிலை, நம்பிக்கை, தாய்நாடு, தகைமைகள், சுகாதார தகைமை போன்றவை தொடர்பான விளக்கங்களை வழங்கலாகாது.

X. இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் நேரடியாக ஆட்சேர்த்தல் வேண்டும்.

XI. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் ஒருவரினால் தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் செயன்முறையில், தேசிய ரீதியில் ஒத்துழைக்கின்றவர்களை இணைத்துக்கொள்ளும்போது அதுபோன்ற பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் ஒருவர் அவ்வாறு ஒத்துழைப்பு வழங்குவோரின் செயற்பாடுகளையிட்டு பொறுப்புக்கூற சட்டப்படி கட்டுப்பட்டுள்ளார். அந்த ஒத்துழைப்பு வழங்குவோரை நாட்டுச் சட்டம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டம், பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவை போன்றவற்றிற்கு கீழ்ப்படிதலை உறுதிசெய்வதற்காக அவர்களுக்கு அறிவுருத்தல் வழங்குதல், கட்டுப்படுத்தல் போன்றவற்றை குறித்த பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவரினால் மேற்கொள்ளல் வேண்டும்.

XII. முகவர்களால் வழங்கும் சேவைகளுக்காக தொழிலாளர்களிடமிருந்து அறிவிடுகின்ற எல்லாவிதமான கட்டணங்களும், செலவினங்களும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்படல் வேண்டும். தொழில் நாடுவோரினால் மேற்கொண்ட எல்லாவகையான கொடுப்பனவுகளுக்கும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் பற்றுச்சீட்டு வழங்குதல் வேண்டும்.

XIII. தொழில் நாடுவோரிடமிருந்து கட்டணம் அறவிடுவதற்காக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தங்களுக்காகவேண்டி நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் இடைத்தரகர்களுக்கு இடமளியாதிருத்தல்.

XIV. இலங்கை அரசினால் தொழிலாளர்களை அனுப்பாத நாடுகளின் பட்டியலை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் தங்களுடைய வியாபார இடங்களில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

XV. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தொழிலுக்காக வெளிநாடு செல்வதற்காக சட்டப்படியானதும், பாதுகாப்பானதுமான வழிகளை மாத்திரம் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் பின்பற்றப்படுவதுடன், விடுமுறைக்காக வெளிநாடு செல்லல், உறவினர்களைப் பார்க்கச் செல்லல், வியாபாரத்துக்காகப் பயணித்தல் போன்ற பல்வேறு வழிகளினை (தொழிலுக்காக ஆட்களை அனுப்பும்போது) பின்பற்றாதிருத்தல்.

XVI. தொழில் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடும்போது மிரட்டுதல், பலவந்தப்படுத்தல், துன்புறுத்துதல், ஊழல், ஏமாற்றுதல் போன்றவற்றை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் தொழிலாளர்களை அச்சுறுத்தி மேற்கொள்ளாதிருத்தல்.

# 6. தொழிலாளர்களது பாதுகாப்பும் நலன்களும்

I. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் ஈடுபடும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களின் பிரதான பொறுப்பாக புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பினையும் நலனோம்புகளையும் உறுதிசெய்வதாகவுள்ளது. ஆகவே தொழிலாளர்களின் பாதுகாப்பினையும் நலனோம்புகளையும் உறுதிசெய்வதற்காக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் வெளிநாடுகளிலுள்ள தூதுவராலயங்கள் போன்ற அரசதுறை பங்காளர்க்கு முடியுமான ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொடுத்தல்.

II. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள், தங்களுடைய வெளிநாட்டு முகவர்களினூடாக வெளிநாட்டில் தொழில் பெற்றவர்களுக்கான நலன்புரி சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்குவதில் ஈடுபடுதல் வேண்டும்.

III. வெளிநாட்டு அனுசரணையாளர்/ தொழிலதிபர்களினால் ஒப்பந்தங்களினூடாக பொறுப்பாக்கப்படும் பொறுப்புக்களை மேற்கொள்ளப்படுகின்றதா என்று உறுதிசெய்வதற்காக வெளிநாட்டு சகபாடிகளுடன் (Counterparts) கிட்டிய தொடர்புகளை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் மேற்கொண்டுவரல் வேண்டும்.

IV. வெளிநாட்டுத் தொழிலதிபர் மற்றும் தொழிலுக்காக ஆட்சேர்ப்புச் செய்தவருக்கிடையிலான உடன்பட்ட தொழில் ஒப்பந்தங்களிலுள்ள அத்தியாயங்கள், கட்டுப்பாடுகளினை தொழிலதிபர் மேற்கொள்கின்றாரா என்பதை உறுதிசெய்வதற்காக நியாயமான அனைத்து நடவடிக்கைகளையும் குறித்த பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தங்களுடைய சகபாடிகள் ஊடாக செய்தல் வேண்டும்.

V. தொழிலதிபர் ஒப்பந்தங்களிலுள்ள பொறுப்புக்களை மீறும்போது குறித்த இடத்திலேயே தீர்வுகண்டு, பாதிப்புக்குட்பட்ட தொழிலாளர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தனிப்பட்டமுறையில் தொழிலதிபரைச் சந்தித்து அவர்களை தைரியமூட்டச்செய்யப்படும்.

VI. தொழிலுக்காகச் செல்வதற்குள்ள நாட்டின் நிறுவனங்களின் நடவடிக்கைப் (operational) பொறுப்புக்கள் பாதுகாப்பான, ஆபத்தற்ற, தொழிலாளர்களின் சுகாதாரம் பாதிப்புக்குட்படுவற்கு இடமளியாது என்றவகையில் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் உறுதிசெய்தல் வேண்டும்.

VII. ஒப்பந்தத்திலுள்ள அத்தியாயங்கள், பணியாற்றச் செல்லும் நாட்டிலுள்ள சட்டம், சம்பிரதாயங்கள், நியதிகள் பற்றி வெளிநாட்டுத் தொழிலுக்காகத் தெரிவுசெய்த தொழிலாளர்களைச் சிறப்பாகத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

VIII. வெளிநாட்டுத் தொழில்களுக்குத் தெரிவுசெய்தவர்களை அந்த நாட்டிலுள்ள முறைப்பாடுகளைச் செய்யும் வழிமுறைகளையிட்டு தெளிவுபடுத்துதல் வேண்டும்.

IX. மரணம், விபத்து அல்லது பாரிய துஷ்பிரயோகம் தொடர்பாக தமது வெளிநாட்டு சகபாடி, தொழிலதிபர் அல்லது தொழிலாளரினால் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களிடம் அறிவிக்கும்போது மேலதிக நடவடிக்கைக்காக அந்தத் தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்/ வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் முன்வைத்தல் வேண்டும்.

X. எந்தவொருவகையிலும் அல்லது பிரச்சினைக்கு முகங்கொடுத்த தொழிலாளர்களுக்கு கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தத்திற்கேற்ப போக்குவரதது வசதிகள், மருந்து வகைகள் வழங்குதல் போன்ற நலன்புரி வசதிகளை செய்தல் மூலம் மீண்டும் திரும்பிவருவதற்கு வசதியளிப்பதற்கும், வரவேற்பதற்கும், பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

XI. எந்தவொருவகையிலும் அல்லது பிரச்சினைக்கு ஆளாகி திரும்பிவருகின்ற தொழிலாளர்களை மீண்டும் சமூகத்துடன் ஒன்றிணைவதற்கு உதவுவதற்குத் தேவையான சமூக உளவியல்சார் உளவளத்துணை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஈடுபடுத்துதல், தேவையாயின் மேலதிக உதவி பெறுவதற்காக குறித்த நிறுவனங்களிடம் அனுப்புவதற்கு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

XII. சிறுவர் ஊழியத்தினைப் பெறுவதற்காக, பலவந்தமாக ஊழியத்தினைப் பெறுவதற்காக, சட்டவிரோத ஆட்சேர்ப்புகளுக்காக, மனித ஆள் வியாபாரம், மனித ஆட்கடத்தல்களுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஆர்ப்பாட்டங்களுக்கு அல்லது நிகழ்ச்சிகளுக்கு உதவுதல் மற்றும் ஒத்துழைத்தல் போன்றவற்றை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இடம்பெறுவது அவசியமாகும்.

XIII. புலம்பெயர் தொழிலாளர்களதும் அவர்களது குடும்பத்தினரதும் உரிமைகளை ஆபத்துக்குள்ளாக்குதல், தடையேற்படுத்துதல் அல்லது மீறப்படும் எந்தவொரு செயற்பாட்டினையும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் நீக்குதல் வேண்டும்.

XIV. புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு, நலன்புரி மேம்பாட்டுக்காகவுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நடவடிக்கைத் திட்டத்துடன் செயற்றிறன்மிக்கதாக கலந்துகொள்ளல், ஒத்துழைப்புடன் இயங்குதல், பரஸ்பர உதவுதல் போன்றவற்றை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

XV. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் புலம்பெயர் தொழிலாளர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகள், நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு வெளியிடப்பட்டுள்ள சர்வதேச சட்ட ஆவணங்களினை மதித்து அவற்றுக்கு நம்பிக்கையூட்டும் வழிவகைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

XVI. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அறிமுகம்செய்துள்ள புலம்பெயர் தொழிலாளர்களுக்கான சமூக பாதுகாப்பு வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்குதல் வேண்டும்.

## 7. பயிற்சி

I. வெளிநாட்டு அனுசரணையாளர்களின் ஒப்பந்தங்களிலுள்ள தேவைகளுக்கேற்ப, நிர்வாகம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள தரங்களுக்கேற்ப, தொழிலாளர்கள் புலம்பெயர முன்னர் வெளிநாட்டு மொழிப் பாடநெறிகளையுள்ளடக்கிய விஷேட தொழிற்பயிற்சிகளை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் ஒழுங்குசெய்தல்.

II. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதி கவனத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் தொழிலாளர்கள் புலம்பெயர முன்னர் பயிற்சியும், திசைமுகப்படுத்தல் பயிற்சியும் (முசநைவெயவழைெ), ஒப்பந்தங்கள் மற்றும் பயணிக்கின்ற இடம் தொடர்பான நடைமுறையிலுள்ள தகவல்களையும் தொழிலாளர்க்கு வழங்குதல்.

III. பாதுகாப்பான புலம்பெயர்வு, முறைசாரா புலம்பெயர்விலுள்ள பாதகங்கள் உட்பட மனித ஆள் வியாபாரம், மனித ஆட்கடத்தல்களிலுள்ள ஆபத்தான நிலைமைகள் பற்றி தொழில் நாடுவோரினை விளிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தலும், நடாத்துதலும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

IV. தாம் பணியாற்றச் செல்ல எதிர்பார்த்துள்ள நாட்டில் தொழிலாளர்களது உரிமைகள், பொறுப்புகள், கட்டுப்பாடுகள், தொழிற்பிரிவுகள், மேற்கொள்ளவேண்டியவையும்,செய்யக்கூடாதவையும் தொடர்பாக பணியாற்றச் செல்வோரை

தெளிவுபடுத்துவதற்கு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் கவனத்தில்கொள்ளப்படுதல் வேண்டும்.

V. உலகளாவிய பயிற்சிபெற்ற தொழிலாளர் பற்றாக்குறை தொடர்பில் ஆட்சேர்ப்பு முகவர்கள் தெளிவுடனிருத்தல் என்பதுடன், அதிகூடிய கேள்வியையுடைய விஷேட திறன்களைக்கொண்ட புலம்பெயர் தொழிலாளராவதற்குள்ளவர்களுக்கு தெளிவினைப் பெற்றுக்கொடுத்தலும், அந்த விசேட திறன்களுள்ளவர்களாவதற்கு அக்கறையூட்டுவதற்கும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் இடம்பெறுதல் அவசியமாகும்.

# 8. முறைப்பாடுகளையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல்

I. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால், அல்லது அவற்றின் பணியாளர்களினால் வழங்கும் சேவைகளையும், கடமைகளையும் பற்றி ஒருவர் செய்யும் முறைப்பாட்டை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவரினால் அவசரமாக தீர்வு வழங்குதல் வேண்டும். தொழில் நாடும் பெண் ஒருவரால் முறைப்பாடு செய்யப்படின், பதிவு செய்த முகவர் மூலம் முறைப்பாடுகளை விசாரணை செய்யும்/ ஆய்வுயெய்யும் குழுவில் பெண்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

II. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் அல்லது அவற்றில் பணியாற்றுபவர்களால் வழங்கும் சேவைகளை, கடமைகளையிட்டு, இந்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக் கோவையில் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் கீழ்ப்படிதல் பற்றி எந்தவொரு விடயத்துக்குமுரியதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் செய்யப்படும் முறைப்பாடுகளின் விளக்கத்தை நிர்வாகிகளால் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களுக்கு வழங்கினால், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விஷேடமாகக் குறிப்பிட்டுள்ள காலப்பகுதியில் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் முறைப்படி பதிலளித்தல் வேண்டும்.

III. பணியாற்றும் நாட்டின் சட்டங்களுக்கும், இலங்கை அரசாங்கம் மற்றும் பணியாற்றும் நாட்டுடன் கைச்சாத்திடப்பட்ட எந்தவொரு இருதரப்பு ஒப்பந்தங்களுக்கும் கீழ்ப்படிந்து, தொழிலாளர்களுக்கும், வெளிநாட்டுத் தொழிலதிபர்களுக்கும் இடையிலான எல்லாவகையான முரண்பாடுகளினையும் குறித்த தரப்பினரிடையேயான உடன்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு தீர்த்தல் வேண்டும்.

IV. புலம்பெயர் தொழிலாளர்களின் துயரங்களைத் தீர்ப்பதில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் குறித்த அரச துறையினருடன் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் பூரண ஒத்துழைப்புடன் பணியாற்றுதல் வேண்டும்.

V. புலம்பெயர் தொழிலாளர்களது முறைப்பாடுகளைத் தீர்க்கும்போது வெளிநாட்டு சகபாடிகள்/ தொடர்புகொள்பவர்கள் தாமதமின்றி

நடவடிக்கை மேற்கொள்வதற்காக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களின் கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

VI. தொழிலாளர்க்கு வழங்கப்பட்டுள்ள தொழில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயங்கள், கட்டுப்பாடுகளை தொழிலதிபர்களால் முறைப்படி பின்பற்றப்படும் மட்டத்தினை உயர்த்துவதற்கு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

VII. தொழிலதிபரினால் தொழிலாளர்க்கு வழங்கப்படாத கொடுப்பனவினைப் பெற்றுக்கொடுக்க உள்ள அனைத்து வழிவகைகளையும் பற்றி பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தேடிப்பார்த்தல் வேண்டும்.

VIII. பணியாற்றும் நாட்டின் அரசியல்/ பொருளாதாரம்/ வேறு எந்தவொரு அவசர நிலைமைகளின் காரணமாக மீண்டும் திரும்பிவருவதற்கு நேரிட்டால் அதனையிட்டு அதிகாரசபைக்குத் தேவையான ஒத்துழைப்புகளை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் வழங்குதல் வேண்டும்.

IX. புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பத்தினரால் முன்வைக்கப்படும் துன்பங்களைப்பற்றி விசாரிப்பதற்குத் தேவையான யதார்த்தமுள்ளதும் உண்மையானதுமான தகவல்களை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் வழங்குதல் வேண்டும்.

X. கடமைகளை மீறுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள்/ தொழிலதிபர்கள்/ அனுசரணையாளர்கள்/ தொடர்புடைய தகவல்களினை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களினால் மேற்கொண்டுவரல் வேண்டும். அத்துடன், அந்தத் தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினூடாக ஏனைய முகவர்களுக்கும் வழங்கவேண்டும்.

## 9. சேவை பெறுவோர், தொழில்நாடுவோர்க்குள்ள பொறுப்புகளும், வாடிக்கையாளர் நலன்களும்

I. பொதுமக்கள் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களின் அலுவலகத்திற்கு வரும்போது, வேறு எந்தவொரு வகையிலும் (தொலைபேசி/ பெக்ஸ்/ மின்னஞ்சல்/ கடிதம் போன்ற) அல்லது விசாரிக்கும்போது பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் மூலம் பொருத்தமான வாடிக்கையாளர் நலன்களைப் பற்றிய கொள்கைகளைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

II. வாடிக்கையாளர்க்கு நற்புடன்கூடிய சூழல் காணப்படுமிடத்து பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களின் அலுவலகத்தினை நடாத்திச்செல்லல் வேண்டும்.

III. பொதுசன உறவுகள் மற்றும் தொழில் நாடுவோருடன் மரியாதையாக நடந்துகொள்ளும்வகையில் பதிவு செய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தமது பணியாளர்களைப் பயிற்றுவித்து, பெண்களுக்கு விசேடமாக கவனஞ்செலுத்தி தொழில்

நாடுவோரின் அந்தரங்கத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

IV. சட்டத் தேவைப்பாடுகளின்போது வழங்வேண்டிய தகவல்கள் தவிர்ந்து ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் வெளிநாட்டுத் தொழிலைத் தேடுகின்ற ஒருவரின்/ சேவை பெறுநரின் தனிப்பட்ட தகவல்களின் இரகசியத் தன்மையை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் மேற்கொண்டுசெல்லல் வேண்டும்.

V. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தொழில் வாய்ப்புகளைத் தேடுகின்ற ஒருவரின் தற்போதுள்ள அல்லது எதிர்கால தொழில்வாய்ப்புகளை அநியாயமாக பாதிப்புக்குட்படுத்தும் எந்தவொரு செயற்பாடுகளிலும் ஈடுபடுவதிலிருந்து தவிர்ந்துகொள்ளல் வேண்டும். அத்துடன், தொழில்வான்மை விருத்திக்காக தங்களுடைய உயர்ந்தபட்ச இயலளவினை தொழில்நாடும் ஒருவர் ஈடுபடுத்திக்கொள்ளக்கூடிய உரிமையை உறுதிசெய்தல் வேண்டும்.

VI. வாடிக்கையாளர்களால் இலகுவில் பெற்றுக்கொள்ளும்வகையில் கல்வி மற்றும் விளிப்புணர்வை மேம்படுத்துவதற்கான பிரசுரங்கள் போன்றவற்றை தமது வியாபார இடங்களில் வைத்திருப்பதற்கு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். தேவையானபோது அல்லது கோருகின்றபோது சேவைபெறுநர்க்கு மொழிபெயர்ப்பு வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

VII. வேலைவாய்ப்புகளைப் பற்றி தொழில்நாடுவோர் விசாரிக்கும்போது பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் நடைமுறையிலுள்ள தொழிற்சந்தை தகவல்கள் உள்ளடங்கிய தொழில் மற்றும் இடங்கள், மாற்று வழிகள் தொடர்பான சரியான அறிவுருத்தல்களை வழங்குதல் வேண்டும்.

VIII. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தொழில்நாடுபவரினால் வழங்கப்பட்ட தகவல்கள் தொழிலுக்காகத் தெரிவுசெய்தல் அன்றி வேறு நோக்கத்திற்காக பாவிக்காது தவிர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

## 10. கூட்டுச் சேர்தல்

I. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் மற்றும் வெளிநாட்டு ஆட்சேர்க்கும் குழுவினரிடையேயான தொடர்புகள்.

(அ) வியாபார கூட்டுச்சேர்வோருடன் தொழில் முகவர் ஒருவர்/ ஒருத்தி பரஸ்பர புரிந்துணர்வுடன் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் ஒருவர் போட்டியாளருடன் நியாயமாக நடந்துகொள்ளுதல் வேண்டும். தொழிலாளர்மீது சுமையை செலுத்த வாய்ப்புள்ளதால், உடன்பட்ட தொகையிலும் பார்க்க அதிகமான தொகையைச் செலுத்துதல் மூலம், ஒப்பந்தம் மற்றும் கூட்டுச்சேர்வோரினை வெற்றிகொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

(இ) ஏனைய பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் நியாயமாக, தாழ்மையுடன், மரியாதையாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

II. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடனான தொடர்புகள்

(அ) நிர்வாகிகளால் விஷேடமாகக் குறிப்பிடும் காலத்தினுள், நிர்வாகம் கோருகின்ற/ வினவுகின்ற தகவல்களுக்காக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் பதிலளித்தல் வேண்டும்.

## 11. மீண்டும் திரும்பிவரல், மீண்டும் சமூகத்துடன் இணைத்தல் (கூட்டிணைதல்)

I. தொழில் அபிவிருத்திக்காக வழிகாட்டுதல்/ ஆலோசனை வழங்குதல், மீண்டும் திரும்பி வரல், சமூகத்துடன் ஒன்றிணைவதற்கு ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த முகவர்களிடம் அனுப்பும் நோக்கத்தின்பேரில் தொழிலாளர்களும், அவர்களது ஒப்பந்தம் முடிவடையும் காலம் பற்றிய அறிக்கையை பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் வழிப்படுத்துதல் வேண்டும்.

II. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மீண்டும் சமூகத்துடன் ஒன்றிணைவதுடன் தொடர்பான அறிவுருத்தல்கள், வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும். மீண்டும் திரும்பிவந்த பின்னர் பயனுள்ள முதலீடுகளை மேற்கொள்ளும் வழிமுறைகளைப் பற்றி பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சந்தர்ப்பத்துக்கேற்ற அறிவுருத்தல்களை வழங்குதல் வேண்டும்.

## 12. பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையை விளங்கிக்கொள்ளல்

I. பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்கள் தமது இணையத்தளத்தில் பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையை காட்சிப்படுத்துவதுடன், அதில் செய்யவேண்டிய திருத்தங்களை மேற்கொண்டு, அதனை நாள்வலுப்படுத்தல் செய்தல் வேண்டும்.

II. சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகள் மூன்றிலும் தயாரித்த பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையின் பிரதியை நன்றாகத் தெரியும்வண்ணம் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களால் தங்களுடைய அலுவலகத்தில் கீழே குறிப்பிடப்படும் இடங்களில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

(அ) சேவைபெறுநர்களால் பாவனைக்குட்படுத்தப்படும் மண்டபம் ஒன்று இருப்பின் அவ்விடத்தில்.

(ஆ) சேவைபெறுநர்களுடன் வியாபார நடவடிக்கைகளினை மேற்கொள்ளும்/ கலந்துரையாடும் அலுவலகம்/ அறை.

III. சேவை பெறுநர் கோருகின்ற சந்தர்ப்பத்தில் பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையின் பிரதியொன்றை வழங்கும் வகையில் தொழில்முகவர் மரியாதையுடன் நடந்துகொள்ளல்.

## 13. பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையை நடைமுறைப்படுத்துதல்

I. தன்னுடைய அங்கத்தவர்களுடன் பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களின் சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

II. பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக்கோவையை மீறுகின்ற எந்தவொரு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் தொடர்பாகவும் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களின் சங்கத்திடம் முறையிடலாம். எல்லா முறைப்பாடுகளையும் சங்கத்தில் கோவையிடல் வேண்டும்.

III. பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக் கோவையை மீறுகின்ற எந்தவொரு அனுமதிப்பத்திமுள்ளவரையும் அழைத்து 14 நாட்களினுள் முறைப்பாட்டை/ பிணக்கைத் தீர்ப்பதற்குக் கோரவேண்டும். அத்துடன், அவ்வாறு செய்யத் தவறின் பதிவு செய்த ஆட்சேர்ப்போரின் சங்கத்தின் மூலம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடம் முறைப்பாட்டைச் செய்தல் வேண்டும். அவ்வாறான முன்வைப்புகள் நிலையான மாதிரிக்கேற்ப தயாரிக்கப்படல் வேண்டும்.

IV. பதிவு செய்த ஆட்சேர்ப்போரின் சங்கத்தின் மூலம் முன்வைத்த முறைப்பாடு தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மூலம் விசாரணை செய்யலாம். அதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் கமிட்டியொன்று நியமிக்கப்படலாம். அவ்வாறான முறைப்பாடுகளை இணக்கல் பிரிவு/ வழிப்படுத்தல் பிரிவினால் கருத்திற்கொள்ளல் வேண்டும். அவ்வாறன்றி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் நியமிக்கப்பட்ட கமிட்டியா என்பதைத் தீர்மானிப்பதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவரால் அறிக்கைப்படுத்தல் வேண்டும்.

V. கமிட்டியினால் கண்டறியப்பட்ட விடயங்களைக் கோவைப்படுத்துவதற்காக பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் சங்கத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

VI. ஒழுக்காற்றுக்குழு கண்டறிந்த விடயங்களுக்கு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் கட்டுப்பட்டுள்ளதுடன், அந்த விடயங்களால் விதிக்கப்படும் கட்டளைகளைப் பற்றி பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் திருப்திகொள்ளாதவிடத்து,

சுயாதீனமான விசாரணையைக் கோரி வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலன்புரி அமைச்சின் செயலாளர்க்கு மேன்முறையீடு செய்யலாம். அவ்வாறன்றி சட்டத்தின் உதவியை நாடலாம்.

## 14. அதிகாரத்துவம்

I. எந்தவொரு பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர் மூலமாக பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக் கோவையை மீறியிருப்பின் பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக் கோவையால் பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம்.

(அ) எழுத்துமூலமாக ஆபத்தினை அறிவித்தல்.

(ஆ) முறைப்பாட்டின் தன்மைக்கேற்ப குற்றம் புரிந்த பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவரின் நட்சத்திர தரத்தினைக் கீழிறக்க முடிவதுடன், அதனை எதிர்கால தரப்படுத்தல்களுக்கும் தாக்கஞ்செலுத்தலாம்.

(இ) அனுமதிப்பத்திரத்தினைப் புதுப்பித்தலை தற்காலிகமாக தடைசெய்யும்படி நிர்வாகத்திடம் சான்றுப்படுத்தலாம்.

(ஈ) ஆட்சேர்க்கும் அனுமதிப்பத்திரத்தினை மீளத் திருப்பி வழங்கும்படி அல்லது தடைசெய்யும்படி கமிட்டியினால் நிர்வாகத்திடம் சான்றுப்படுத்தலாம்.

## 15. முறைப்பாடுகளை முன்வைக்கும் காலப்பகுதி

I. பண்பாட்டு விழுமியம்சார் ஒழுக்கநெறிக் கோவை மீறப்பட்டதனை அறிந்து 03 மாதங்களுக்குள் பதிவுசெய்த ஆட்சேர்ப்பு முகவர்களின் சங்கத்திடம் முறைப்பாடு செய்யலாம்.

II. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அல்லது வேறு எந்தவொரு ஏற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகளில், தொழில்நாடுவோரினால், சேவை பெறுநர்களினால் அல்லது ஏனைய அனுமதிப்பத்திரமுடையோரால் கிடைக்கின்ற முறைப்பாடுகள் அனைத்தையும் சங்கத்தினால் மேற்கொள்கின்ற எல்லாவிதமான விசாரணைகளுக்கும் உட்படுத்தப்படும்.

புலம்பெயர் தொழிலாளர்களின் நல்லாட்சிக்கான பாதுகாப்பு, வலுப்படுத்தல் மூலம் கௌரவமான தொழில் மேம்படுத்தலை மேற்கொள்வதற்கான கருத்திட்டத்திற்கு இலங்கை தேசிய புலம்பெயர் தொழிலாளர் கொள்கைத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் வழிமுறையின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, மாலைதீவுகளுக்கான ச.தொ.தா அலுவலகம்
202-204, பௌத்தாலோக்க மாவத்த,
கொழும்பு - 07, இலங்கை
தொலைபேசி : +94 11 259 2525
பெக்ஸ் : +94 11 250 0865
இணையம் : www.ilo.org/colombo

அனுசரணை

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

**Swiss Agency for Development and Cooperation SDC**